# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 139/2015

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ரமேஷ் தேதி : 16.11.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–** (1ம் பிரதிவாதி தரப்பில்)

நான் 5,000 சதுர அடி நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். என் தந்தை வா.சா.ஆ.–1 ஆவணத்தின்படி 10,000 சதுர அடி நிலத்தை கிரயத் தொகை ரூ.30,000/– க்கு கிரயம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.–2 ஆவணத்தின்படி 1ம் பிரதிவாதி 5,000 சதுர அடி நிலத்தை ரூ.72,500/–க்கு வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் வா.சா.ஆ.–2 ஆவணத்தை ரத்து செய்ய வழக்கு போட்டுள்ளேன். நானும் என் சகோதரரும் இளவராக இருந்ததால் என் தாயார் காப்பாளராக இருந்து கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பொய் ஆகும். என் தாயார் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. வழக்குரையில் என் தாயார் சொத்தை கிரயம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 656/2015 என்ற வழக்கை முதல்பிரதிவாதி என்பெயரிலும் என் சகோதரர் பெயரிலும் தாக்கல் செய்தார். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அ.வ.எண். 6/2017 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி வா.சா.ஆ.–2 ஆவணத்தின்படி தாவா சொத்தை விலைக்கு வாங்கி பட்டா மாறுதல் செய்துள்ளார் என்று சொன்னால் பட்டா மாறுதல் செய்துள்ளார். ஆனால் அது தவறான பதிவு ஆகும். முதல் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டடுள்ளது. ஆனால் அது தவறான பட்டா ஆகும். தாவா சொத்து முதல் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்று சொன்னால் அது தவறான பதிவு ஆகும். முதல் பிரதிவாதி தாவா சொத்திற்கு வரி செலுத்தியுள்ளார் என்று சொன்னால் அது தவறானது ஆகும். தாவா சொத்து எனக்கும் என் சகோதரர்களுக்கும் என் தாயாருக்கும் இடையே 28.03.2008 ம் தேதியில் ஏற்பட்ட பாகபத்திரத்தின்படி உரிமை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

09.06.2022 ம் தேதியில் நான் சேலம் மாவட்ட பதிவாளருக்கு மனு கொடுத்தேன். பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய மனு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த மனுவில் கனம் சமூகத்தார்கள் அவர்கள் ஏற்கனவே கிரயம் ஆனது பற்றி அறியாமல் தவறுதலாக கடந்த 28.03.2008 ம் தேதி பதிவான பாகபிரிவினை பத்திரத்தை ரத்து செய்து உத்தரவு செய்யவேண்டுமாய் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த மனுவின்பேரில் 18.07.2022 ம் தேதியில் மாவட்ட பதிவாளர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார். நான் மாவட்ட பதிவாளரிடம் விசாரணையில் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன். மாவட்ட பதிவாளரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில் பாகபத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

அ.வ.எண். 139/2015 ல் உள்ள 3 வது பிரதிவாதி மாவட்ட பதிவாளரிடம் ஆஜராகி பாகபத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாவட்ட பதிவாளர் வாக்குமூலங்களையும் மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவு என்னிடம் இல்லை. மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவில் ஏற்கனவே ஆவண எண். 793/1987 ன்படி விற்பனை செய்யப்பட்ட 10,000 சதுர அடி நிலத்தை பாகப்பிரிவினை ஆவண எண். 1204/2008 மூலம் பாகம் பிரித்துக்கொண்டுள்ளதால் மேற்படி ஆவண எண். 1204/2008 முறையற்ற ( Fraudulent Document ) ஆவணமாக கருதப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை முறையற்ற ஆவணமாக பாகப்பிரிவினை பத்திரத்தில் நானும் என் சகோதரரும்

உரிமை இல்லை என்று ஒப்புக்கொண்டதனால் தாவா சொத்தில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

அ.வ.எண். 6/2017 வழக்கில் நானும் என் சகோதரரும் சேர்ந்துதான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம். என் தந்தை இறந்தபிறகு என் தாயார் தான் எனக்கும் என் சகோதர்களுக்கும் பாதுகாவலராக இருந்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் எங்களுக்கு பாதுகாவலர் என்ற முறையில் தாவா சொத்துக்களை இளவர்களின் நலனுக்காக நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் விற்பதற்கு உரிமை உள்ளது என்று சொன்னால் தவறாகும். இளவருக்காக பாதுகாவலர் சொத்தை விற்பனை செய்தால் அதை ரத்து செய்ய உரிய வயதை அடைந்த பிறகு 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

( முதல் பிரதிவாதியின் வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.